**Judicial Form No-53**
**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No CC 798/2022**
**Prosecution Witness –PW 1, LW 2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சேசையா | Nationality: | இந்தியன் |
| Father's Name : | அந்தோணிசாமி | Calling: | மீன்பிடி தொழில் |
| Village: | தூத்துக்குடி | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 56 |
| District: | தூத்துக்குடி | | |

**(Accused absent. 355 BNSS Petition filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019 on 15.06.2026**

**சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

**சாட்சியானவர் ஏற்கனவே 23.02.2026ம் தேதி பகுதியாக முதல் விசாரணை செய்யப்பட்டு இன்று தொடர்ச்சியாக முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

1. **எதிரி மைக்கேல் முர்ரே என்பவருக்கு வங்கி மூலம் பணம் செலுத்தியதற்கான Counter File – 7 எண்ணம் அ.சா.ஆ.1 ஆகவும், காசோலை எண்கள்.024034, 004440, தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க், அதற்கான Challan– 2 எண்ணம், Return Memo –2 எண்ணம் ஆகியவை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. போலிசார் விசாரணையில் எதிரியை எங்கு சந்தித்தேன், தொழில் சம்மந்தமாக என்ன பேசினேன், எங்கு வைத்து பணம் கொடுத்ததாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். Boat வாங்குவதற்காக வங்கி கடன் கேட்டேன் என்பதற்கான ஆவணங்கள் எதையும் போலிசார் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சமர்ப்பித்துள்ளேன். எந்த எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் பணம் போட்ட வங்கி கணக்கு ஆனது இரண்டு வெவ்வேறு நபர்களின் வங்கி கணக்குகள் என்றால் எதிரியின் வங்கி கணக்கில் தான் பணம் செலுத்தினேன். வங்கி கணக்கு எண்.7574 மற்றும் 00083 ஆனது வெவ்வேறு நபர்களின் பெயரில் உள்ளதா என்றால் இரண்டும்

எதிரியின் வங்கி கணக்கு தான். மேற்படி இரண்டு வங்கி கணக்கு எண்களை எதிரி தான் என்னிடம் கொடுத்தார். இந்த விபரங்களை போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன்.

2. இன்சூரன்ஸ் பாண்ட் வைத்து லோன் வாங்கியதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அதற்குரிய ஆவணங்களை போலிசார் விசாரணையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். போலிசார் விசாரணையில் இன்சூரன்ஸ் வகைக்காக தான் எதிரியிடம் பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என்ன வகையான இன்சூரன்ஸ் எதற்காக இன்சூரன்ஸ் போடப்பட்டது போன்ற விபரங்களை போலிசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். சென்னை காவல் துறை ஆணையரிடம் முதலில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அங்கு வைத்து பேசி முடிக்கும் போது காசோலைகள் என்னிடம் கொடுத்தார் என்றால் இல்லை. மேற்படி சென்னை காவல் துறை ஆணையரிடம் விசாரிக்கும் போது எதிரியின் நண்பர் ஒருவர் ரூ.50,000/–க்கான காசோலை என்னிடம் கொடுத்தார். மேற்படி காவல் துறை ஆணையரிடம் விசாரணை நடைபெற்றது குறித்தும், எதிரியின் நண்பர் காசோலை கொடுத்தது குறித்தும் விசாரணை அதிகாரியிடம் விசாரணையில் கூறியுள்ளேன்.

3. எதிரியின் நண்பர் கொடுத்த காசோலை எண் மற்றும் வங்கி குறித்த விபரங்களை போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். 05.05.2014 அன்று பெறப்பட்ட காசோலை மற்றும் 27.06.2014 அன்று பெறப்பட்ட காசோலை ஆகிய இரண்டையும் சென்னையில் வைத்து எதிரி கொடுத்தார். இங்கிருந்து கிளம்பி சென்னைக்கு சென்று காசோலை வாங்கினேன். பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக சென்னையிலேயே பேசி சென்னை காவல் துறை ஆணையரிடம் கொடுத்த புகார் மனு சம்மந்தமாக பணம் கொடுக்கல் வாங்கல் அங்கேயே பேசி முடிக்கப்பட்டு காசோலை பெறப்பட்டது என்றால் சரிதான். ஆனால் காசோலை ரூ.50,000/– க்கு மட்டும் கொடுத்தார்கள். மீதம் உள்ள தொகைக்கு ரூ.3 லட்சத்திற்கான காசோலையை நான் தங்கியிருந்த ரூமில் வைத்து கொடுத்தார்கள்.

4. தூத்துக்குடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவை மாவட்ட குற்றப்பிரிவில் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையின் போது

மற்றும் நீதிமன்றத்திலும், புகார் மனு கொடுத்ததற்கான ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் வைத்துள்ளேன். காசோலை திரும்பியது தொடர்பாக காசோலை மோசடி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் மொத்த பணம் எவ்வளவு கொடுத்தேன், எதிரி எனக்கு எவ்வளவு பணம் திருப்பி கொடுத்ததாகவும், மீதி பணம் எவ்வளவு தரவேண்டும் என்பது குறித்து போலிசார் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்துள்ளேன். பொதுவாக எதிரிக்கு கொடுத்துள்ள பணம் இன்சூரன்ஸ் வகைக்காகவோ, அல்லது லோன் வகைக்காகவோ கொடுக்கப்படவில்லை என்றும் தொழில்நிமித்தமாக எதிரி கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பணத்தை பெற்றுக்கொண்டு தங்களுக்கு காசோலை மூலம் பணம் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல.

5. உண்மையில் எதிரி என்னிடம் மோசடி செய்யும் நோக்கத்தோடு பணத்தை பெற்றிருந்தால் நான் அதற்குரிய ஆவணங்களை முறையாக சமர்ப்பித்திருப்பேன் என்றும் ஆனால் அதற்குரிய ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் எதிரிக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக ஏற்கனவே சென்னை காவல் துணை ஆணையரிடம் புகார் கொடுக்கப்பட்டு பேசி முடிக்கப்பட்டது என்றும், ஆனால் பணம் சம்மந்தமாக காசோலை திரும்பிவிட்டது என்றும் இது சம்மந்தமாக காசோலை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் எதிரி மீது முறையின்றி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கும், இவ்வழக்கின் சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால்

சரியல்ல. எதிரியை பழிவாங்கும் நோக்கத்துடன் கொடுக்காத புகாருக்கு புகார் கொடுத்துள்ளதாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-S.Packiaraj,
Judicial Magistrate No.IV,
Thoothukudi.